# 1 அன்னைத் தமிழே!



அன்னைத் தமிழே – என்
ஆவி கலந்தவளே!
என்னை வளர்ப்பவளே!
என்னில் வளர்பவளே!
உன்னைப் புகழ்வதற்கே
உலகில் பிறப்பெடுத்தேன்
சொல்லில் விளையாடச்
சொல்லித் தந்தவளே!
சொல்லில் உனது புகழ்
சொல்ல முடியலையே!

– நா. காமராசன்

KMA3DA

## பொருள் அறிவோம்

என் அன்னையாகிய தமிழே! என் உயிரில் கலந்தவளே! என்னை வளர்ப்பதோடு மட்டுமல்லாமல், என் உடன் சேர்ந்து வளர்பவளே! உன்னைப் புகழ்வதற்காகவே இவ்வுலகில் பிறந்துள்ளேன். சொல்லைக் கொண்டு விளையாடுவதற்குச் சொல்லிக் கொடுத்தவளே! அதே சொல்லினால் உனது புகழை என்னால் கூற முடியவில்லையே!

ஓசை நயமும் கருத்தும் மிக்க பாடல்களைக் கேட்டுப் புரிந்துகொள்ளுதல்.

## வாங்க பேசலாம்



- பாடலை ஓசை நயத்துடன் பாடுக.
- பாடலைச் சரியான உச்சரிப்புடன் படித்து மகிழ்க.
- மொழியின் சிறப்பினைக் கூறும் வேறு பாடலை அறிந்து வந்து பாடுக.




நாம் வளரும் போதே நம்முடன் சேர்ந்து வளர்வது தமிழ் மொழி எவ்வாறு? கலந்துரையாடுக.

## படிப்போம்! சிந்திப்போம்! எழுதுவோம்!

### சரியான சொல்லைத் தெரிவு செய்து எழுதுவோமா?

01 அன்னை + தமிழே – என்பதைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல் ....................................

| | | | |
|---|---|---|---|
| அ) | அன்னந்தமிழே | ஆ) | அன்னைத்தமிழே |
| இ) | அன்னத்தமிழே | ஈ) | அன்னைதமிழே |

02 பிறப்பெடுத்தேன் – இச்சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ....................................

| | | | |
|---|---|---|---|
| அ) | பிறப் + பெடுத்தேன் | ஆ) | பிறப்பு + எடுத்தேன் |
| இ) | பிறப் + எடுத்தேன் | ஈ) | பிறப்ப + எடுத்தேன் |

03 மறந்துன்னை – இச்சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ....................................

| | | | |
|---|---|---|---|
| அ) | மறந்து + துன்னை | ஆ) | மறந் + துன்னை |
| இ) | மறந்து + உன்னை | ஈ) | மறந் + உன்னை |

04 சிறப்படைந்தேன் – இச்சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ....................................

| | | | |
|---|---|---|---|
| அ) | சிறப்பு + அடைந்தேன் | ஆ) | சிறப் + அடைந்தேன் |
| இ) | சிற + படைந்தேன் | ஈ) | சிறப்ப + அடைந்தேன் |

05 என்னில் என்ற சொல்லின் பொருள் ....................................

| | | | |
|---|---|---|---|
| அ) | உனக்குள் | ஆ) | நமக்குள் |
| இ) | உலகுக்குள் | ஈ) | எனக்குள் |

## வினாக்களுக்கு விடையளி

01 சொல்லில் விளையாடச் சொல்லித் தந்தவள் யார்?

02 எதைச் சொல்ல முடியவில்லை என்று இப்பாடலின் ஆசிரியர் குறிப்பிடுகிறார்?

03 இப்பாடலின் ஆசிரியர் அன்னைத் தமிழை எவ்விதம் புகழ்கிறார்?

**1. இப்பாடலில் இடம் பெற்றுள்ள ஒரே எழுத்தில் தொடங்கும் சொற்களை எடுத்து எழுதுக.**

| | | |
|---|---|---|
| என்னை | – | என்னில் |
| | – | |
| | – | |
| | – | |

**2. இப்பாடலில் இடம் பெற்றுள்ள ஒரே ஓசையில் முடியும் சொற்களை எடுத்து எழுதுக.**

| |
|---|
| கலந்தவளே |
| |
| |
| |
| |



## செயல் திட்டம்

- மொழியின் சிறப்பினைக் கூறும் இரண்டு பாடல்களை எழுதி வந்து படித்து / பாடிக் காட்டுக.

## பாடலை நிறைவு செய்வோம்



பட்டாம் பூச்சி பறந்து வா

பறக்கும் பூவாய் .............................. ................

பட்டுமேனி ஓவியம்

பார்க்க .............................. ...............................


தொட்டு .............................. பார்க்கவா

தோழனாக .............................. ...........................




## சொல் உருவாக்கலாமா?







1. ..................................................
2. ..................................................
3. ..................................................
4. ..................................................

## வண்ணம் தீட்டி மகிழ்வோம்



## அறிந்து கொள்வோம்



தமிழ்ச்செல்வி,
தமிழரசன்... என்பன
போலத் தமிழ்மொழியை
மட்டுமே பெயராகப்
பயன்படுத்த முடியும்.

